[2003 மார்ச் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *115*, திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

115—

கூட்டுறவு அங்காடி

***6252—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி வடக்கு, ஈச்சன்விடுதி பகுதி மக்களுக்குப் பகுதிநேர கூட்டுறவு அங்காடி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈச்சன்விடுதி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்புகள் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈச்சன்விடுதி, செருவாவிடுதி வடக்கு ஊராட்சிப் பகுதியைச் சேர்ந்ததாகும். அந்தக் கிராமத்திலே ஏறக்குறைய 300 விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் ரேஷன் மற்றும் உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக, ஏறக்குறைய 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செருவாவிடுதி வடக்குப் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இதனால் ஏழை, எளிய மக்களுடைய வேலைவாய்ப்பு போகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்தக் கிராமத்திலே விரைவில் பகுதிநேர அங்காடியைத் துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

2003 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பகுதிநேரக் கடையை அமைக்க வேண்டுமென்றால், இரண்டு கிலோ மீட்டர் தொலைவு இருந்திட வேண்டும். அதேபோன்று 200 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமல் இருந்திடுதல் வேண்டும். இந்த இரண்டும் அந்தப் பகுதியில் இல்லை. 181 குடும்ப அட்டைகள் மாத்திரம் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. ஈச்சன்விடுதி பகுதி 1½ கிலோ மீட்டர் தூரத்தில் மாத்திரமே இருக்கிற காரணத்தால், இவ்விரு வரையறைகளும் பொருந்தாததால், ஈச்சன்விடுதி பகுதியில் புதிய பகுதிநேர அங்காடி அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருஞானசம்பந்தம்.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈச்சன்விடுதி கிராமத்தைச் சுற்றிப், பல்வேறு குக்கிராமங்கள் இருக்கின்றன. அவர்களும் 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, 500 குடும்ப அட்டைகள் கொண்ட செருவாவிடுதி ஊராட்சியிலிருந்து கூடுதலாக இன்னும் 25 குடும்பங்களை அந்தப் பகுதியிலே சேர்த்து அங்கு துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடர்ப்பாடுகள் எல்லாம் இருப்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். எனவே, சில விதிகளைத் தளர்த்த இயலாத சூழ்நிலை இருந்திட்டாலும், அந்தப் பகுதியிலே அவசியம் தேவை என்று உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, மனுக்கள் மூலமாகத் தந்து, அந்தப் பகுதிக்குத் தேவை என்றால், சிறப்பு அடிப்படையிலே தருவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.